08.07.2025



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.136/2008**

**பி.வா.சா.1–வசந்தி, க/பெ.மகேந்திரன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 1972ம் ஆண்டு பிறந்தேன். நான் தாக்கல் செய்துள்ள எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3 ல் வழக்குரையில் 4 வது பத்தியில் சொல்லியுள்ள விவரங்கள் பூராவும் உண்மையல்ல என்று சொல்லியுள்ளேன், அந்த 4 வது பத்தி விவரம் தெரியுமா என்றால் நான் என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் வழக்குரை 4 வது சங்கதிகள் உண்மையல்ல என்று சொல்லியுள்ளது சரியல்ல. நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4, 5, 6, 7, 8, 9 முறையே வழக்குரையில் பத்தி 5, 6, 7, 8, 9, 10 ஆகிய பத்திகளில் கண்டுள்ள விவரங்கள் பூராவும் உண்மையல்ல என சொல்லியுள்ளேன், அந்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையில் பத்தி 5, 6, 7, 8, 9, 10 ஆகிய பாராக்களில் சொல்லியுள்ள விவரங்கள் குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் குறிப்பாக தெரியாது. என் கணவருக்கு தாவா சொத்தை தவிர வேறு

08.07.2025



சொத்து எதுவும் கிடையாது. என் மாமனார் 22.11.2009 ம் ஆண்டு இறந்துவிட்டார். தாவா சொத்து என் கணவருக்கு பூர்வீக சொத்து என்பது தான் என்னுடைய கட்சி என்றால் சரிதான். தாவா சொத்திற்கு என் மாமனார் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு முதன் முதலில் பட்டா என் கணவர் பெயரில் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். முதன் முதலில் 1993 ம் ஆண்டு தான் என் கணவர் பெயரில் பட்டா ஏற்பட்டது. என் மாமனார் பெயர் கோவிந்தசாமி. இந்த கோவிந்தசாமி தகப்பனார் பெயர் ரெங்கசாமி. என் மாமனார் கோவிந்தசாமி வேறொரு ஊரிலிருந்து பிழைப்பிற்காக தாவா கிராமத்திற்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். அவருடைய சொந்த ஊர் திருவெள்ளாரை அருகே கீராம்பாளையம் கிராமம் ஆகும். என் மாமனார் தாவா கிராமத்தில் திருமணம் செய்து கொண்டதால் அங்கு வந்துவிட்டார். என் மாமனார் கோவிந்தசாமிக்கு வீடு இல்லை என்பதால் அரசாங்கம் தாவா சொத்து காலிமனையை அடமானம் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு என் மாமனார் கோவிந்தசாமிக்கு அரசாங்கம் அடமானம் கொடுத்ததற்கு ஆவணம் கிடையாது. தாவா சொத்திற்கு என் கணவர் பெயரில் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு ஆவணங்கள் எதுவும் கிடையாது என்று சொன்னால் சரிதான். என் கணவருக்கு முதன் முதலில்

08.07.2025



கொடுக்கப்பட்ட தாவா சொத்திற்கு பட்டா ஆவணம் 1993 ம் ஆண்டு பி.வா.சா.ஆ.2 ஆவணம் என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் 1995 ம் ஆண்டு தான் திருமணம் நடைபெற்றது. தாவா சொத்தை பொறுத்து 1993 ம் ஆண்டு என் கணவர் அரசாங்கத்திடம் அடமானம் பெற என்ன விவரத்தின் அடிப்படையில் கொடுத்தார், என்ன மனு கொடுத்தார் என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் தாவா சொத்து அடமானம் வழங்கியதற்காக அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்பட்டது அது மட்டும் தான் தெரியும். இந்த அடமான பத்திரத்தை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு எனது கணவர் பெயரில் ஏற்பட்ட பி.வா.சா.ஆ.2 பட்டா ஆவணத்திற்கு முன்பே வாதி கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சொன்னால் சரியல்ல. வாதி பெரியம்மாள் தாவா சொத்தை 18.07.1985 ம் ஆண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையம் பெற்று விட்டார் என்று சொன்னால் சரிதான், அது பொய் கிரையம். 1985 ம் ஆண்டு எனக்கு 13 வயது என்று சொன்னால் சரிதான். வாதி பெரியம்மாள் மோசடியாக தாவா சொத்தை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேன், அந்த பத்திரத்தை பார்த்துள்ளீர்களா என்றால் என்னிடம் காண்பிக்கவில்லை, நான் பார்க்கவில்லை. அவ்வாறு வாதி பெரியம்மாள்

எழுதிவாங்கியதாக சொல்லப்படும் விடுதலை பத்திரத்தை வழக்குரை தாக்கல் செய்யும் போது 2வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான், ஆனால் அதை நான் பார்க்கவில்லை. என் கணவர் எல்.ஐ.சி முகவர் என்று சொன்னால் சரிதான். என் கணவரின் கையொப்பத்தை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் காண்பித்தால் அடையாளம் காட்டுவேன். சாட்சியிடம் காண்பிக்கப்படும் குறியீடு செய்யப்படாத ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது கணவரின் கையொப்பம் அல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் ஒரு பத்திரத்தில் கையொப்பம் முறைப்படி கேட்டால் 1ம் எதிர்வாதி கேட்டுக்கொண்டதின் பேரில் அநத் பத்திரத்தை படிக்காமல் நம்பி என் கணவர் கையெழுத்து பேட்டுவிட்டார் என சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, அது பற்றி எனக்கு சொல்கேள்வி தான். சாட்சியிடம் கற்றறிந்த வாதி வழக்கறிஞர் காண்பித்த குறியீடு செய்யப்படாத ஆவணத்தில் உள்ள சாட்சியின் கணவரின் கையொப்பம் தான் நான் சொல்லியது போல 600 ரூபாய் கடனுக்காக என் கணவர் போட்ட கையொப்பம் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து என் மாமனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட குடும்ப சொத்து என்று சொன்னால்

08.07.2025



சரிதான், ஆனால் அரசாங்கத்தால் அடமானமாக கொடுத்த சொத்தாகும். என் வீட்டிற்கு தெற்கு திசையில் வாதி பெரியம்மாள் வீடு உள்ளது என்று சொன்னால் சரிதான். வாதி பெரியம்மாள் வீட்டிற்கு மேற்கு திசையில் வீதி என்று சொன்னால் சரிதான். வாதி பெரியம்மாள் வீட்டிற்கு கிழக்கு திசையில் என்ன உள்ளது என்றால் முன்பு மாரியம்மாளிடம் இருந்தது, அதன்பின்பு மூன்று கைகள் மாறிவிட்டது. வாதி பெரியம்மாள் தெற்கு திசையில் பூசாரி மகன் வீரபத்திரம் வீடு உள்ளது. 1985 ம் ஆண்டு பெரியம்மாள் வீட்டிற்கு வடக்கு திசையில் என் மாமனார் கோவிந்தசாமி வீடு உள்ளது. வாதி பெரியம்மாள் வீடு ஒட்டுவில்லை வீடா என்றால் குட்டிசுவரிலேயே சுவர் எழுப்பி கூரைவாரி போடாமல் ஓட்டு வீடுகட்டிவிட்டார். வாதி பெரியம்மாள் எப்போது அந்த ஓட்டுவில்லை வீடு கட்டினார் என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு தான் கட்டினார். பெரியம்மாளின் வீட்டு வடக்கு திசையில் உள்ள சுவரிலிருந்து எத்தணை அடி தள்ளி என்னுடைய கூரைவீடு உள்ளது என்றால் 14 அடி தள்ளி எங்கள் கூரைவீடு உள்ளது.

(கற்றறிந்த வாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/

ஒம்/–திரு.T. அன்பு,

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

துறையூர்.